# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.40 (L.W.67)

| | | | |
|---|---|---|---|
| Name | Pugazhendhee | Caste | SC |
| Father's Name | சுந்தரேசன் | Calling | கூலி |
| Village | மாதனூர் | Religion | |
| Taluk | மாதனூர் | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.02.2025.

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.20 P.M.**

நான் ஆட்டோ ஓட்டுகிறேன். மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறேன். அதற்கு முன்பு கொத்தனாராக வேலை பார்த்தேன். ஆஜர் எதிரிகளில் 1–ம் எதிரியை மட்டும் சாட்சி தெரியும் என்று அவரை பார்த்து அடையாளம் காட்டினார். அவரின் பெயர் மார்ட்டின் பிரேம்ராஜ் ஆகும். மற்ற எதிரிகளை சாட்சி தெரியாது என்கிறார். இன்று ஆஜர் ஆகாத எதிரி 6–ஐ சாட்சி தெரியாது என்கிறார்.

எனது மனைவி பெயர் அமுதா பரிதா ஷு கம்பேனி, அகரஞ்சேரியில் வேலை பார்த்து வந்தார். என் மனவைி அந்த கம்பேனியில் 2015–ம் காலகட்டத்தில் வேலை பார்த்து வந்தார்.

அவருடன் பவித்ரா என்ற பெண்ணும் அதே கம்பெனியில் வேலை செய்து வந்தார். அந்த பவித்ரா என்ற பெண் காணாமல் போய்விட்டதாக 03.06.2015 அன்று பள்ளிக்கொண்டா போலீசார் எங்களை அழைத்தார்கள். என்னுடைய மனைவிக்கு கைப்பேசி இல்லாததால் பவித்ரா என்னுடைய மனைவியிடம் பேச என்னுடைய கைப்பேசிக்கு அழைப்பார். அதன் அடிப்படையில் போலீசார் என்னையும் அழைத்தார்கள்.

நானும் என்னுடைய மனைவியும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சென்றோம். என்னுடைய நண்பன் சரவணன் மற்றும் செந்திலையும் அழைத்தார்கள். பதினைந்து நாட்களுக்கு மேல் விசாரணை செய்தார்கள். பவித்ரா என்ற பெண் காணாமல் போனதால் எங்களை விசாரித்தார்கள். 1–ம் எதிரி மார்டின் சார் என்னை போலீஸ் லத்தியால் வலது காலில் அடித்தார். மேலும் அங்கிருந்த காவலர்கள் இரண்டு நாள் கழித்து என்னை துணியை கழட்டி ஜட்டியுடன் அடித்தாரகள். எந்த காவலர் அடித்தார் என்று தற்போது எனக்கு நினைவில்லை.

பின்னர் தினசரி காவல் நிலையத்திற்கு வந்து செல்ல சொன்னார்கள். நானும் என்னுடைய மனவையும் மற்றும் மேலே சொன்ன இரண்டு நண்பர்களும் காவல் நிலையம் சென்றோம். பதிமூன்று நாட்கள் சென்று வந்துக்கொண்டிருந்தோம். அங்கிருந்த காவல் உதவி ஆய்வாளர் பவித்ராவை தேடினாயா என்று கேட்பார். பவித்ராவை தேடினோம் என்றும் கிடைக்கவில்லை என்றும் கூறினோம்.

16–ம் தேதி மதியம் 01.00 மணிக்கு கூப்பிட்டு எங்களிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டு நாங்கள் கூப்பிடும்போது வர வேண்டும் என்று கூறினார்கள். பிறகு நான்கு நாட்கள் கழித்து செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சியை பார்த்து பவித்ராவை காணவில்லை என்றும் அது தொடர்பாக ஒரு முகமதிய பையனை போலீசார் கொண்டு வந்து விசாரித்தார்கள் என்றும், பவித்ரா கிடைத்துவிட்டதாகவும் தெரிந்துக்கொண்டோம்.

அதன்பிறகு அந்த முகமதிய பையன் இறந்துவிட்டதாக செய்தித்தாளிலும், தொலைக்காட்சியை பார்த்தும் தெரிந்துக்கொண்டோம். அதன்பிறகு சிபிசிஐடி போலீசார் வேலூரில் உள்ள அரிசி குடோனில் வைத்து விசாரித்தார்கள். போலீசாரிடம் நடந்ததை சொன்னேன். போலீசார் சரவணன், அமுதா, செந்தில் மற்றும் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டு தேவைப்படின் மீண்டும் அழைப்போம் என்று வாங்கினார்கள். அந்த ஆவணம் ஏற்கனவே அ.த.சா.ஆ.37 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் பதினொன்றாவது பக்கத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.63. அது ஒளிநகல் தாளில் உள்ள கையொப்பம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அது குறித்து வழக்கின் இறுதியில் வாதுரைக்கலாம்.

அதன் பின்னர் நீதித்துறை நடுவர் என்னை நீதிமன்றத்தில் விசாரித்தார். அவரிடம் நான் வாக்குமூலம் கொடுத்தேன். நீதித்துறை நடுவர் பதிந்த சாட்சியின் வாக்குமூலம் வழக்கு கோப்பில் உள்ளது.

சாட்சி அதை பார்த்து அதில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்கிறார்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய சொந்த ஊர் மாதனூர். மாதனூரிலிருந்து பள்ளிக்கொண்டா காவல் நிலையம் ஒரு மூன்றிலிருந்து ஆறு கிலோமீட்டர் என்றால் ஏழு கிலோமீட்டர் இருக்கும். மாதனூர் செல்ல பள்ளிக்கொண்டா வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் மேஸ்திரி வேலை செய்துக்கொண்டிருந்தேன். அதைத்தான் போலீசாரிடமும் சொன்னேன்.

எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்று நினைவில்லை. 18 வயதில் திருமணம் ஆனது. என்னுடைய பிள்ளைகளின் பிறந்து தேதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை போலீசார் பவித்ரா காணவில்லை என்ற வழக்கில் அழைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை அழைத்து விசாரித்ததாக சொன்னதில் எந்த தேதி கிழமையில் விசாரித்தார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால் தேதி மாதம் கேட்கவில்லை, அதனால் கூறவில்லை.

நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் தோராயமாக பிற்பகல் 12.00 மணிக்கு வந்தேன். வழக்கு தொடர்பாக நான் நீதிமன்றத்திற்கு வந்துவுடன் ஒரு வழக்கறிஞர் அறையில் வைத்து எனக்கு சொல்லிக்கொடுத்து அதை நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் நான் வக்கீல் அலுவலகத்தில் இருந்தபோது எனக்கு உதவியாக ஒரு காவலரும் இருந்தார் என்றும் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய திருமண நாள், என்னுடைய குழந்தைகளின் பிறந்தநாள், என்னுடைய பிறந்தநாள் உள்பட எந்த தேதியும் நினைவில்லாத நான் வழக்கு தொடர்பான தேதிகளை மட்டும் சரியாக கூறுவது வழக்கறிஞர் சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாதிப்பு நடந்தது. அது நினைவில் உள்ளது. எனவே அது குறித்த தேதிகளை சரியாக சொல்கிறேன்.

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்னவற்றையே சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போதும் சொன்னேன். அதை அவர்கள் டைப் செய்துக்கொண்டார்கள். நீதித்துறை நடுவர் என்னை விசாரிக்கும்போது தற்போது நீதிமன்றத்தில் சொன்னவற்றையே கூறினேன். ஆனால் என்னை காவல் நிலையத்தில் அடித்ததை மட்டும் சொல்லவில்லை.

நான் சொல்வது போல் என்னை யாராவது தாக்கியிருந்தால் நான் போலீசாரிடம் சொல்லாவிட்டாலும் நீதிமன்றத்தில் சொல்லியிருப்பேன் என்றாலும், அதை நான் சொல்லாததால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது காவல் நிலையத்திற்கு என்னை அழைத்ததின் தேதி மற்றும் எந்த காவலர் எந்த காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள் என்று சொல்லவில்லை என்றால் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை.

பவித்ரா என்ற பெண்னை என்னுடைய மனைவிக்குத்தான் தெரியும், எனக்கு தெரியாது என்றால் சரிதான். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது நான் பவித்ராவுடன் பேசிய செல்போனை வைத்திருந்தேன்.

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது பவித்ரா என்பவரின் தொலைப்பேசி எண் தெரியாது என்றும் வாக்குமூலம் அளித்தபோது நான் பவித்ராவிடம் பேசிய கைப்பேசி என்னுடன் இருந்ததா என்றால் அந்த கைப்பேசி என்னிடம்தான் இருந்தது. அதை நான் போலீசாரிடம் காண்பித்தேன். பவித்ராவின் செல்போன் என்னையும் போலீசார் பார்த்தார்கள்.

பவித்ரா காணாமல் போனதற்கு அந்த பெண்ணை தேடச்சொல்லி ஹாபியஸ் கார்பஸ் மனு தாக்கல் செய்தது எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் போலீசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. சிபிசிஐடி போலீசாரிடம் சொல்லாத தகவல்களை நீதிமன்றத்தில் மிகைப்படுத்தி சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

காவல் நிலையத்தில் ஆஜர் 1–ம் எதிரி மார்டினை பார்த்ததாக சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றாலும், அவரை நான் பார்க்கவில்லை என்றாலும், அவ்வாறு நான் அவரை பார்த்திருந்தால் நான் சிபிசிஐடி போலீசாரிடம் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. அவரை நான் பார்த்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதால் அவர்கள் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

பவித்ரா காணாமல் போன தேதி மற்றும் மாதம் பற்றி போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலீசார் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. போலீஸ் விசாரணையில் 13 நாட்கள் காவல் நிலையம் வரச்சொல்லி விசாரித்தார்கள் என்று கூறியதில் நாள், தேதி, மாதம் குறிப்பிடவில்லை என்றால் அதை போலீசார் கேட்கவில்லை சொல்லவில்லை.

வழக்கில் இறந்தவரின் ஊர், பெயர், விவரம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் ஒரே கையெழுத்துதான் வாங்கினார்கள். எதற்காக கையெழுத்து போட்டேன் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை அடித்ததற்கான சிகிச்சை பதிவு எதுவும் இல்லை. என்னையும் என் மனைவி அமுதாவையும் பவித்ரா காணாமல் போன வழக்கு தொடர்பாக விசாரித்தார்கள்.

என்னை பள்ளிக்கொண்டா போலீசார் எந்த தேதி, வருடத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்று சிபிசிஐடி வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் பள்ளிக்கொண்டா போலீசார் விசாரித்ததை ஏற்கனவே சொல்லியுள்ளேன். சிபிசிஐடி போலீசார் ஒரு மாதம் கழித்து விசாரித்தார்கள்.

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்த தேதி, மாதம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.40 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.20 16:54:09 +0530